மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 551, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

551—

குரைண்டி—நுகத்தூர் கிராமங்களில் முடிகொண்டான் ஆற்றுப்பாசனம்.

*14006—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் காவிரி வளர்ச்சிப் பணி கோட்டத்தால் முடிகொண்டான் ஆற்றிலிருந்து குரைண்டி—நுகத்தூர், சகடமங்கலம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெற மதிப்பீடு தயார் செய்யப்பட்ட திட்டத்தினை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்ட திட்டத்தை 1992-93 ஆம் ஆண்டுக்கு எடுத்துக்கொள்ள ஒட்டுமொத்த பட்டியலில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் நிதி நிலை காரணமாக இப்பணிக்கு இன்னும் அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் காவிரி வளர்ச்சிப் பணிக் கோட்டத்தின் மூலமாக முடிகொண்டான் ஆற்றிலிருந்து குரைண்டி, நுகத்தூர், சகடமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு பாசன வசதிக்காக சென்ற ஆண்டு விடப்பட்டு இருந்தாலும், இந்த ஆண்டாவது-அந்தப் பகுதியினுடைய விவசாயிகள் பாசன வசதியின்றி, சிரமத்தோடு, இருக்கிறார்கள், காலத்தோடு தண்ணீர் போய் அந்தக் கிராமங்களுக்குச் சேருவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனேகமாக சிரமத்திற்குள்ளாகித்தான் அவர்கள் சாகுபடி செய்கிறார்கள். கடைசிக் கட்டமாகத்தான் அந்தத் தண்ணீர் கிராமத்திற்குள்ளே போக்கூடிய நிலமை ஏற்படுகிறது. எனவே, இந்த ஆண்டாவது—அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த ஆறுகளை ஆழப்படுத்தி பாசன வசதி செய்து கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த காவிரி ஆற்றிலே லைனிங் செய்வதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும் அதற்காக பல திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பினோம். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினையை வைத்து உலக வங்கியிலே ஒரு திட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். Water Consolidation Project என்கிற அந்தத் திட்டம். அது 5 ஆண்டுகளுக்கு 804 கோடி ரூபாய் உதவுகின்ற திட்டம். ஆகவே, நம்மிடத்திலே நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலேதான் உலக வங்கியை அணுகி, நம்முடைய முதல்வர் அவர்கள் அதைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் அதிலே சேர்க்க வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. ஆகவே, தஞ்சை, நாகைப் பகுதிகளுக்கு இப்படிப்பட்ட திட்டங்களிலே முன்னுரிமை கொடுத்துச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை அந்த வாட்டர் கன்சாலிடேஷன் பிராஜக்ட் என்று சொல்லப்படுகிற உலக வங்கித் திட்டத்திலே எடுத்துச் செய்யலாமா என்பதையும் இந்த அரசு பரிசீலித்து வருகிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருந்தாலும் தற்காலிகமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பயன் பெறும் வகையில் அந்த சகடமங்கலத்தின் ஆற்றிலே ஒரு பெட்-டாம் கட்டித் தந்தால், அந்தப் பாசன வசதிகளுக்கு ஏற்ப ஒரு லெவல் மட்டத்தில் ஒரு பெட்-டாம் கட்டிக் கொடுத்தால் அதன் மூலம் வரக்கூடிய தண்ணீராவது பாசனத்திற்கு தருவதற்கு வாய்ப்பாக அமையும் ஆகவே அதையாவது அமைச்சர் அவர்கள் செய்வதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதில் லைனிங் செய்வதற்காக ஏறக்குறைய 8 லட்சம

ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அந்தத் திட்டத்திற்கு என்ன செலவாகும் என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி அது குறைந்த அளவில் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டிருந்தால் உடனடியாக செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி ஆதாரம் அதிகமாக வந்திருந்தால் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல உலக வங்கியின் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம். அதற்கு ஒன்றும் காலம் அதிகம் ஆகாது. வருகின்ற ஆண்டுகளிலே அதற்கான நடைமுறைகளையெல்லாம் கொண்டுவர இருக்கிறோம். ஆகவே விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 552, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

552—

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் வீட்டு சூரியசக்தி சுடுநீர் அமைப்பு.

*16113—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் வீட்டு சூரியசக்தி சுடுநீர் அமைப்பு ஒன்றைத் தயாரிக்க ஆகும் செலவு எவ்வளவு ?

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் கிராமப்புற மக்களுக்கு அதிகமான அமைப்புகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் எந்த சாதனங்களையும் தயாரிப்பதில்லை. தமிழ்நாட்டில் சூரிய சக்தி சுடுநீர் சாதனங்களை பல நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன. வீட்டு சுடுநீர் சாதனம் ஒன்றின் விலை தயாரிப்பாளர்களிடமிருந்து விலையைப் பொறுத்து ஏறத்தாழ **ரூ. 10,500 முதல் ரூ. 12,500 வரை ஆகிறது.**